சுருக்கம்

பள்ளிக்கல்வி – பொது நூலகங்கள் - 2022-2023ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பு – புத்தக வாசிப்பை ஒரு மக்கள் இயக்கமாக எடுத்துச் செல்ல, சென்னை புத்தகக்காட்சி போன்று தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் புத்தகக் காட்சிகள் நடத்துவதற்கு நிருவாக அனுமதி - ரூ.4,96,50,000/-க்கு நிதி ஒப்பளிப்பு - ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக்கல்வித் (பொ.நூ.2) துறை

அரசாணை (நிலை) எண்.119

நாள் 30.06.2022
திருவள்ளுவர் ஆண்டு 2053
சுபகிருது, ஆனி 16

படிக்கப்பட்டவை:

1. 2022-2023ஆம் ஆண்டிற்கான பொது வரவு செலவு திட்டத்தின் போது மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு.
2. பொது நூலக இயக்குநரின் கடிதத்தினை ந.க. எண்.2523/ எ1/2022, நாள். 28.04.2022 மற்றும் 23.05.2022.

---------

**ஆணை:**

சட்டமன்றப் பேரவையில் 2022-2023ஆம் ஆண்டிற்கான பொது வரவு செலவு திட்டத்தின் போது மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் 18.03.2022 அன்று இன்னபிறவற்றுடன் கீழ்க்காணும் அறிவிப்பும் வெளியிடப்பட்டுள்ளது:-

> "63) சமுதாயத்தை அறிவார்ந்த நிலைக்கு உயர்த்துவதில் புத்தக வாசிப்பு முக்கியப் பங்கு வகிக்கிறது. புத்தக வாசிப்பை ஒரு மக்கள் இயக்கமாக எடுத்துச் செல்ல, சென்னை புத்தகக்காட்சி போன்று தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் புத்தகக் காட்சிகள் நடத்தப்படும். இத்துடன் இலக்கியச் செழுமை மிக்க தமிழ்மொழியின் இலக்கிய மரபுகளைக் கொண்டாடும் வகையில், ஆண்டுக்கு நான்கு இலக்கியத் திருவிழாக்கள் நடத்தப்படும். புத்தகக் காட்சிகள் மற்றும் இலக்கியத் திருவிழாக்கள் வரும் ஆண்டில் 5.6 கோடி ரூபாய் செலவில் நடத்தப்படும்"

2. மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, பொது நூலக இயக்குநர் தனது கடிதங்களில் கீழ்க்காணும் விவரங்களை தெரிவித்துள்ளார்:-

(அ) தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் புத்தகக்காட்சி நடத்தும் பொருட்டு, மாவட்டங்களை கீழ்க்கண்டவாறு மூன்று வகையாக பிரித்து (வகை A, B & C), அதில் A வகை மாவட்டங்களுக்கு

//த.பி.பா.//

மானியமாக தலா ரூ.17.50 இலட்சமும், B வகை மாவட்டங்களுக்கு மானியமாக தலா ரூ.14/- இலட்சமும், C வகை மாவட்டங்களுக்கு மானியமாக தலா ரூ.12/- இலட்சமும் ஆக மொத்தம் ரூ.4,96,50,000/- மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

| வ. எண். | வகை | மாவட்டம் | எண்ணிக்கை | புத்தகக் காட்சிக்கான மானியம் ஒரு மாவட்டத்திற்கு (ரூ.) | மொத்த தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 1 | A | மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, ஈரோடு, சேலம், திருப்பூர். | 7 | 17,50,000 | 1,22,50,000/- |
| 2 | B | வேலூர், தூத்துக்குடி, தஞ்சாவூர், திண்டுக்கல், நாகர்கோயில், கரூர், கடலூர். | 7 | 14,00,000 | 98,00,000/- |
| 3 | C | பெரம்பலூர், விழுப்புரம், நாகப்பட்டினம், தருமபுரி, ராணிப்பேட்டை, புதுக்கோட்டை, திருவண்ணாமலை, அரியலூர், கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை, காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, இராமநாதபுரம், நாமக்கல், திருப்பத்தூர், விருதுநகர், தேனி, திருவாரூர், சிவகங்கை, திருவள்ளூர், நீலகிரி, செங்கல்பட்டு, தென்காசி | 23 | 12,00,000 | 2,76,00,000/- |
| | | மொத்தம் | | | 4,96,50,000/- |

(ஆ) மேலும், மாநிலம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் புத்தகக் காட்சி நடத்துவதற்கு பள்ளிக்கல்வி ஆணையர் தலைமையில் கீழ்க்கண்டவாறு மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு அமைக்கலாம்:-

| வ. எண் | பெயர் | பதவி |
|---|---|---|
| 1. | ஆணையர், பள்ளிக்கல்வி ஆணையரகம். | தலைவர் |
| 2. | பொது நூலக இயக்குநர், பொது நூலக இயக்ககம். | உறுப்பினர்-செயலர் |
| 3. | இணை இயக்குநர், பொது நூலக இயக்ககம். | உறுப்பினர் |
| 4. | திரு. க. அருண்மணி, இணை இயக்குநர், ஊரக வளர்ச்சி இயக்ககம். | உறுப்பினர் |
| 5. | திரு. சங்கர சரவணன், துணை இயக்குநர், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் கழகம். | உறுப்பினர் |
| 6. | தலைவர், தென்னிந்தியப் புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கம் (BAPASI) | உறுப்பினர் |

//த.பி.பா.//

(I) **மாநில ஒருங்கிணைப்புக் குழுவின் பணிகள் பின்வருமாறு:-**

(அ) பதிப்பாளர்கள் மற்றும் புத்தக விற்பனையாளர்கள் சார்ந்த பிரதிநிதிகளை கலந்து ஆலோசித்து மாநிலம் முழுவதும் புத்தகக் காட்சி நடத்துவதற்கான கால அட்டவணை தயார் செய்தல்.

(ஆ) மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவினரோடு இணைந்து புத்தகக் காட்சி நடத்துவதற்கான ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்குதல்.

(இ) மாநில அளவில் புத்தகக் காட்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்.

(ஈ) நிதி மற்றும் செலவினங்களை ஒருங்கிணைத்து கண்காணித்தல்.

(உ) புத்தகக் காட்சி நடத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்தல்.

மேலும், மாவட்டங்களில் நடைபெறும் புத்தகக் காட்சிகளை ஒருங்கிணைத்து நடத்துவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அமைக்கப்படும் என்றும், இக்குழுவின் உறுப்பினர் செயலரை மாவட்ட ஆட்சித் தலைவர் நியமித்துக் கொள்வார் என்றும், பல்வேறு துறை சார்ந்த அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள், எழுத்தாளர்கள், புத்தக வாசிப்பு ஆர்வலர்கள், சமூக ஆர்வலர்கள், பதிப்பகம் சார்ந்த பிரதிநிதிகள், நூலகர்கள், நூலக வாசகர் வட்டம் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்ட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அமைக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

(II) **மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் பணிகள் பின்வருமாறு:-**

(i) ஒவ்வொரு மாவட்டத்திலும் புத்தகக் காட்சி நடத்துவதற்கு மாவட்டத்தின் மையப்பகுதியில் போதுமான இடவசதியுள்ள காலியான மைதானத்தை தேர்வு செய்தல்.

(ii) மாநில ஒருங்கிணைப்பு குழுவுடன் இணைந்து மாவட்டங்களில் புத்தகக் காட்சியினை நடத்துதல்.

(iii) புத்தகக் காட்சி நடத்துவதற்கு மாநில ஒருங்கிணைப்புக் குழு அளிக்கும் கால அட்டவணையினை, மாவட்ட நிர்வாகத்துடன் ஆலோசித்து உள்ளூரில் நடக்கும் பல்வேறு நிகழ்ச்சிகளின் அடிப்படையில் புத்தகக் காட்சி நடத்த வேண்டிய நாட்களை தேர்வு செய்தல்.

(iv) புத்தகக் காட்சி நடைபெறும் வளாகத்தில், பொதுமக்கள் எளிதாக வந்து செல்லும் வகையில் வடிவமைத்தல்.

(v) புத்தகக் காட்சி நடைபெறும் அரங்கங்களின் எண்ணிக்கையினை பொறுத்து, இப்புத்தகக் காட்சியினை உள்ளரங்குகளில் நடத்துதல்.

(vi) புத்தகக் காட்சி நடத்துவதற்கான பணிகளை வரிசைப்படுத்தி அவற்றிற்கான உட்குழுக்களை அமைத்து, அதன் பணிகளை ஒருங்கிணைத்து கண்காணித்தல்.

(vii) புத்தகக் காட்சி மற்றும் அதனைச் சார்ந்து நடைபெறும் கலை நிகழ்ச்சிகள், மற்றும் பிற இலக்கியம் சார்ந்த நிகழ்ச்சிகளுக்கு வல்லுநர்கள், கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்களை தேர்வுசெய்தல் மற்றும் நிகழ்ச்சி நிரலினை தயார் செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளுதல்.

(viii) புத்தகக்காட்சி நடத்துவதற்கான நிதி ஆதாரங்களை அரசு மானியம், கொடையாளர்களிடமிருந்து பெறப்படும் நிதி, விளம்பரதாரர் மூலம் பெறப்படும் நிதி ஆகியவை மூலம் நிதி திரட்டும் பணிகளை மேற்கொள்ளுதல்.

(ix) புத்தகக் காட்சிக்காக பயன்படுத்த இயலும் அரசின் பிற துறை நிதியினையும் கண்டறிந்து பயன்படுத்துதல்.

(x) நிதி மேலாண்மைக்கான குழு அமைத்து தனியாக வங்கிக் கணக்கு ஆரம்பித்து அதன் மூலம் சிக்கனமாகவும், சிறப்பாகவும் நிதியினை கையாளுதல்.

(xi) வரவு செலவு கணக்குகளை நிர்வகித்தல்.

(xii) பொது மக்கள் மற்றும் மாணவர்களிடம் புத்தகக் காட்சி தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்த பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்துதல். மேலும், மாணவர்கள் புத்தகக் காட்சியில், புத்தகம் வாங்க பணம் சேமிக்கும் திட்டத்தினை ஊக்குவித்தல்.

(xiii) மேற்படி, தேர்வு செய்யப்பட்ட இடத்தில் அரசின் அனைத்து வழிகாட்டுதல் நெறிமுறைகள் மற்றும் விதிமுறைகளை பின்பற்றி புத்தகக் காட்சியினை நடத்துதல், மேலும் அனைவரது பாதுகாப்பினையும் உறுதி செய்ய செய்தல்.

மேலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் புத்தகக் காட்சி நடத்த “A” வகை “B” வகை மற்றும் “C” வகை மாவட்டங்களில் தோராயமாக அமைக்கப்படும் அரங்கங்களின் எண்ணிக்கை, அரசு அனுமதிக்கும் மானியம் குறித்த விவரங்களை பொது நூலக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. மேலும் பொது நூலக இயக்குநர் தனது கடிதத்தில், 2022-2023ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட அறிவிப்பில் “அனைத்து மாவட்டங்களிலும் புத்தகக்காட்சி நடத்துதல்” என்ற அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மேற்குறிப்பிட்டுள்ளவாறு மாநில அளவிலான மற்றும் மாவட்ட அளவிலான குழு அமைத்து செயல்படத்தக்க ஆணை வழங்குமாறும், மேற்படி குழுவின் ஆலோசனைகளின்படி அனைத்து மாவட்டங்களிலும் புத்தகக் காட்சி நடத்துவதற்கான நிர்வாக அனுமதியும், அதற்கான மொத்த செலவினத் தொகையான ரூ.4,96,50,000/- (ரூபாய் நான்கு கோடியே தொண்ணூற்றாறு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) (A வகை மாவட்டங்கள் ரூ.1,22,50,000/-, B வகை மாவட்டங்கள் ரூ.98,00,000/-, C வகை மாவட்டங்கள் ரூ.2,76,00,000) அரசு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யுமாறும் பொது நூலக இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

//த.பி.பா.//

4. பொது நூலக இயக்குநரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, 2022-2023ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தின் போது மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்பான "தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் புத்தகக் காட்சிகள் நடத்துதல்" என்ற அறிவிப்பினை செயல்படுத்த ஏதுவாக, பின்வருவனவற்றிற்கு அனுமதி வழங்கி ஆணையிடுகிறது:-

(i) மேலே பத்தி2(ஆ)இல் குறிப்பிட்டுள்ளவாறு பள்ளிக்கல்வி ஆணையரை தலைவராகவும், பொது நூலக இயக்குநரை உறுப்பினர்-செயலராகவும் மற்றும் 4 உறுப்பினர்களைக் கொண்டு மாநிலம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் புத்தகக் காட்சி நடத்துவதற்கு மாநில ஒருங்கிணைப்புக் குழு அமைக்க அனுமதி.

(ii) அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அமைத்துக் கொள்ள அனுமதி.

(iii) வருவாய் மாவட்டங்களை 3 வகையாக பிரித்து அதில் A வகை மாவட்டங்களுக்கு, ஒரு மாவட்டத்திற்கு ரூ.17,50,000/- வீதம் 7 மாவட்டங்களுக்கு ரூ.1,22,50,000/-, B வகை மாவட்டங்களுக்கு ரூ.14,00,000/- வீதம் 7 மாவட்டங்களுக்கு ரூ.98,00,000/-, C வகை மாவட்டங்களுக்கு ரூ.12,00,000/- வீதம் 23 மாவட்டங்களுக்கு ரூ.2,76,00,000/- என மொத்தம் ரூ.4,96,50,000/- செலவினம் மேற்கொள்ள பொது நூலக இயக்குநருக்கு அனுமதி.

(iv) அனைத்து மாவட்டங்களுக்கும் புத்தகக் காட்சி நடத்துவதற்கு தேவைப்படும் மொத்தத் தொகை ரூ.4,96,50,000/-க்கு (ரூபாய் நான்கு கோடியே தொண்ணூற்றாறு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

5. மேலே பத்தி 4(iv)இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்றுவைக்கப்பட வேண்டும்:-

"2205 00 – கலையும் பண்பாடும் – 105 பொது நூலகங்கள் – மாநிலச் செலவினங்கள் – JM புத்தக வெளியீட்டாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் நலவாரியத்திற்கு நிதியுதவி - 309 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை.

IFHRMS: த.தொ.கு. 2205 00 105 JM 309 03"

6. மேலே பத்தி 4(iv)இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்திற்கான நிதி ரூ.4,96,50,000/-, 2022-23ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய ஒதுக்கீட்டை எதிர்நோக்கி மேலே பத்தி 4இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள பொது நூலக இயக்குநர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. இருப்பினும் சட்டமன்றத்தின் ஒப்புதலை பெறும் பொருட்டு, ஒரு சிறப்பு நிகழ்வாக கருதி (SI) இச்செலவினம் 2022-23ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட வேண்டும்.

//த.பி.பா.//

இச்செலவினத்திற்கான உரிய கருத்துருவினை 2022-23ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கம் மற்றும் துணை மதிப்பீடுகளில் (Supplementary Estimates 2022-23) சேர்க்கத் தக்க வகையில் உரிய விவரங்களுடன் நிதி(கல்வி-II/வ.செ.பொது-I)த் துறைக்கு அனுப்புமாறு பொது நூலக இயக்குநர், சென்னை – 2 கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.308/ADS(GKT)/கல்வி-II/2022, நாள் 30.06.2022இல் பெற்றப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.0550 (ஐந்நூற்று ஐம்பது). (IFHRMS ASL No.2022 06 0550)

(ஆளுநரின் ஆணைப்படி)

காகர்லா உஷா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பொது நூலக இயக்குநர் (மு.கூ.பொ), சென்னை - 2.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள். (சென்னை மாவட்டம் நீங்கலாக)
மாநில கணக்காயர், சென்னை – 18/35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை – 35.
அனைத்து மாவட்ட கருவூலங்கள்.

**நகல்:-**
அரசு முதன்மைச் செயலாளர்,
சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை, சென்னை-9.
நிதி (கல்வி-II/வரவு செலவு பொ-I/II/வ.வ.I)த் துறை, சென்னை-9.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை - 9.
மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர், சென்னை – 9.
மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர்
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை - 9.
பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர்
அவர்களின் தனிச் செயலர், சென்னை-9.
பள்ளிக்கல்வித் (வரவு செலவு)துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
30/06/2022